# ஸ்ரீவித்யபாரதி உயர் நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 94432-31727

மாதிரி முழுஆண்டு தேர்வு

வகுப்பு : 10ம் வகுப்பு | சமூகஅறிவியல் | மதிப்பெண்கள்: 100
நேரம் : 3.00 மணித்துளிகள்

பகுதி 1 (மதிப்பெண்கள் 14)

I . சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட்சென் ஈ) மா சே துங்
2. 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழுக்கம்?
   அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம் இ ராமகிருஷ்ணர் ஈ)திராவிட மகாஜன சபை
3. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
   அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936
4. கீழ்க்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?
   அ) S. சத்தியமூர்த்தி ஆ) ககஸ்துாரிரங்கர் இ) P. சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா
5. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ---------நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது
   அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப் பணி ஆணையம்
   இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்
6. நாம் பருத்தி ஆடைகளை -------------------காலத்தில் அணிகிறோம்
   அ)கோடைகாலம் ஆ) குளிர் காலம் இ) மழைக்காலம் ஈ) வடகிழக்கு பருவக்காற்று காலம்
7. இந்தியா வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசிலமைப்புச் சட்டப்பிரிவு எது?
   அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு51 இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு53
8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது ?
   அ) அருணாச்சலப்பிரதேசம் ஆ) மேகாலயா இ) மிசோரம் ஈ) சிக்கிம்
9. தமிழ்நாட்டில் மிக அதிக மழைபெறும் பகுதி
   அ) களக்காடு ஆ) ஒகேனக்கல் இ) சின்னகல்லார் ஈ) கிள்ளியூர்
10. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம் -------
    அ) 80.32 ஆ) 62.33 இ) 73.45 ஈ) 80.33
11. பஞ்சசீலக் கொள்கை கையெழுத்தானது
    அ)நேரு மற்றும் சூ-யென் லாய் ஆ)நேரு மற்றும் நாசர் இ)நேரு மற்றும் சுகர்னோ ஈ)நேரு மற்றும்நிக்ருமா
12. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
    அ) குடியரசுத் தலைவர் ஆ)இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
    இ) ஆளுநர் ஈ)பிரதம அமைச்சர்
13. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?
    அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர் இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை
14. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?
    அ) பாதுகாப்பு அமைச்சர் ஆ) பிரதம அமைச்சர்
    இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர் ஈ) உள்துறை அமைச்சர்

பகுதி II (மதிப்பெண்கள் 20)எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் (28 வது கட்டாய வினா)

15. பதுங்குக்குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
16. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.
17. வளங்கள் சுரண்டப்படுவது ( செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?
18. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
20. பன்னாட்டு நிதியமைப்பின் ( IMF) நோக்கங்கள் யாவை?

21. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பை பட்டியலிடுக.

22. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?

23. இந்தியாவின் இயற்கை அமைப்பு பிரிவுகள் யாவை?

24. சாபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

25. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?

26. 'கப்பலுக்கு வாயில்' நிகழ்வை விளக்குக.

27. உலகமயமாக்கல் என்றால் என்ன?

28. புவியியல் குறியீடு குறிப்பு வரைக.

பகுதி III (மதிப்பெண்கள் 50) எவையேனும் 10 வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும். (42வது கட்டாய வினா)

29. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. -------------------என்பவர் புரட்சிக் காரர்களால் வேலூர் தோட்டையன் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
2. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ----------------
3. முதல் முதலில் வாகனத்தொழிலகம் அமைக்கப்பட்ட இடம் ----------------
4. -----------மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
5. ------------மாநிங்களின் பொருளாதார வளர்ச்சிகாக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.

30. பொருத்துக

| | |
|---|---|
| 1. வோல்கா | - நேரடி நடடிக்கை நாள் |
| 2. மசகான் டக் | - 1981 |
| 3. NALCO | - மாநில அவசரநிலை |
| 4. சட்டப்பிரிவு 76 | - மும்பை |
| 5. 16 ஆகஸ்ட் 1946 | - ஸ்டாலின்கிரேடு |

31. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

32. அ) வேறுபடுத்துக

1. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் - கனிமவளம் சார்ந்த தொழிலகங்கள்
2.உணவுப் பயிர்கள் - உணவு அல்லாத பயிர்கள்
4.மலைப் பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை

33. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா –சே– துங்கின் பங்களிப்பை அளவிடுக.

34. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும் .

35. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.

36. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

38. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC ) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.

39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

40. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக
1910 – 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்
1.துருக்கி 2. போஸ்னியா 3. செர்பியா 4. கிரீஸ் 5. இத்தாலி

பகுதி IV ( மதிப்பெண்கள் 16) இரு வினாக்களுக்கும் விடையளிக்க.

43. தலைப்பு வினா

அ) மறைமலை அடிகள்

1) மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2) இளைஞராக இருந்தபோது மறைமலை அடிகள் பணியாற்றிய பத்திரகையின் பெயரைக் குறிப்பிடுக.
3) இந்தித் திணிப்பை அவர் ஏன் எதிர்த்தார்?
4) மறைமலை அடிகளின் வாழ்க்கையின் மீது செல்வாக்குச் செலுத்தியவர்களில் முக்கியமானவர்கள்யாவர்?

ஆ) ஸ்டாலின் கிரேடு போர்

1) ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை எப்போது தாக்கியது?
2) ஸ்டாலின் கிரேடின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் யாவை?
3) ஸ்டாலிர் கிரேடைத் தக்குவதற்கு ஹிட்லா் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன?
4) ஸ்டாலின் கிரேடு போரின் முக்கியத்துவமென்ன?

(அல்லது)

லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.

43. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்

1.காரக்கோரம்
2. கஞ்சன் ஜங்கா
3. தக்காண பீடபூமி
4. ஆரவல்லி மலைத்தொடர்
5. மேற்கு தொடர்ச்சி மலை
6.எவரெஸ்ட் சிகரம்
7. ஏதேனுதம் ஒரு வண்டல் மண்பகுதி
8. கோதுமை விளையும் பகுதி

(அல்லது)

கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.

1.கல்வராயன் மலை
2. சோழமண்டல கடற்கரை
3. ஏதேனும் ஒரு கரிசல் மண் பகுதி
4. வைகை சமவெளி
5. பிச்சாவரம் (மாங்குரோவ்)
6. காபி விளையும் இடம்
7. பாவனிசாகர் அணை
8. மின் மற்றும் மின்சாதனம் உற்பத்தி செய்யும் ஏதேனும் ஒரு இடம்

ஆண்டுதோறும் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் சிறப்பிடம் பெற்ற பள்ளி

**2020 – 2021** ஆம் கல்வி ஆண்டிற்கான

**+1 அட்மிசன்** முன்பதிவு நடைபெறுகிறது.